hallo–
baselland.ch

BASEL LANDSCHAFT

# மொழியும் உள்வாங்குதல்

உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)
ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி
மொழி
டொச்மொழி கற்றல்

# உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)

வெளிநாட்டவர்கள் இங்குள்ள சமூகத்துடன் சேர்ந்து பழகி உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் பொருளாதார ரீதியாகத் தம்மை நிலைநிறுத்தவும் டொச் பேசவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## முக்கியமான அடிப்படைக் கோட்பாடு

சுவிஸின் குடியிருப்பாளர்கள் கட்டாயமாக அரசியலமைப்பைக் (உ+மாக ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை) கவனத்தில் கொண்டு சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் அதைத்தவிர இயலுமானவரை பொருளாதார ரீதியாகத் தம்மை நிலை நிறுத்தவும் முயலவேண்டும். வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள் தாம் குடிபுகுந்த இடத்து மொழியைக் விரைவில் கற்க வேணடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒருங்கிணைவு என்பது இரு பக்கத்தினரும் தம் பங்களிப்பைச் செய்தால் மட்டுமே வெற்றியளிக்கும். அதனாலேயே இந்நாட்டு மக்கள் வெளிநாட்டவர்களுடன் திறந்தமனதுடன் பழக எதிர்பார்க்கப்படுகிறது.

## சுய பொறுப்பு

வெளிநாட்டவர்கள் பொருளாதாரம் சமூக கலாச்சாரத்தில் சரியான வழியில் சென்று பயனடைய வேண்டுமென மத்தியஅரசு, மாநில மற்றும் கிராமசபை அக்கறை காட்டுகிறது. வெளிநாட்டவர்கள் அவர்கள் தாமே சுயமாகச் செயற்படவும் உள்வாங்கலிற்குத் தம்மாலான முயற்சிகள் எடுக்கவும் வேண்டும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சமூக வாழ்க்கையில் பங்கெடுத்தல்

சுவிஸ் மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களைப் பழகிக் கொள்ள ஒரு சிறந்த வழி வகைகளை கழகங்கள் ஏற்படுத்துகின்றன. அதைவிட வதியும் கிராமசபைகளில் நடக்கும் விழாக்கள் நிகழ்ச்சிகள் கூட தொடர்புகளை ஏற்படுத்த உதவும். சுவிஸ் மக்கள் எல்லோரும் வெளிநாட்டுக் கலாச்சாரத்திற்கு திறந்த மனதைக் காட்டமாட்டார்கள் என்பதால் ஆரம்பம் சிலசமயம் கடினமாகத் தோன்றலாம். சில சமயம் விடாமுயற்சியும் தேவைப்படலாம்.

## தகவல்கள் / உதவிகள்

Basel-Landschaft மாநிலத்தில் புதிதாகக் குடியேறியவர்களுக்காக பல விதமான தொடக்க நிலையங்கள் உள்ளன. முதலாவது சிறந்த தொடக்க நிலையம் எப்போதும் கிராமசபை ஆகும். அத்துடன் வெளிநாட்டவர்களுக்கென விசேடமான தொடக்க நிலையங்களும் உள்ளன. Baselland குடிவரவு சேவையில் (Ausländerdienst Baselland) சுவிஸில் வாழும் முறை பற்றியும் மற்றும் பல விடயங்கள் சார்ந்த திடமான கேள்விகளுக்கும் பதில் தருவார்கள். Baselland தொடர்பு மையம் (Anlaufstelle Baselland) புகலிடம் மற்றும் குடிவரவு சட்டம் தொடர்பான கேள்விகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.டொச் மொழி பேசத் தெரியாதவர்கள் டொச் மொழி பேசத் தெரிந்த யாரையாவது மொழி பெயர்க்கக் கூட்டி வரலாம், அல்லது ஒரு உரையாடல் மொழிபெயர்ப்பாளரை உதவி செய்யக் கேட்கலாம். சில இடங்களில் வேறு மொழிகளிலும் தகவல்கள் தரப்படும். சில மொழிபேசும் குழுக்களுக்குச் சிறப்புச் சலுகைகள் உள்ளன.

hallo–
baselland.ch

BASEL LANDSCHAFT

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/language-and-integration/integration

# ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி

ஒருங்கிணைப்பைப் பாடசாலைகளிலும், பயிற்சியில், வேலையிடங்களிலும் காணலாம். மேற்குறிப்பிட்ட வசதிகள் கிடையாதவர்களுக்கு வேறும் பலவகையான ஒருங்கிணைப்பு வசதிகள் உள்ளன.

## குறிப்பிட்ட வசதிகள்

வெளிநாட்டவர்கள் சுவிஸ் மக்களுடன் சேர்ந்து வாழவும் தொடர்பு கொள்ளவும் பல வகையான குறிப்பிட்ட வசதிகள் உள்ளன. அவை மற்றவர்களுடன் சேர்ந்து பேசுவது ஓய்வுநேர வசதி வாய்ப்புக்கள் விரிவுரைகள் அல்லது வகுப்புகளாகும். இந்த வாய்ப்புகள் பற்றி Ausländerdienst Baselland (ald) அல்லது வதியும் கிராமசபை அறியத்தரும். அதிகமான கிராமசபைகள் புதிதாகக் குடிவந்தவர்களை வரவேற்பதற்காக நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும். - முதல் கண்ணோட்டத்தைப் பெற இது ஒரு நல்ல வாய்ப்பு ஆகும்.

## கழகங்கள்

Basel-Landschaft மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein) அங்கத்தவராயிருப்பார்கள்.பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

## இடம்பெயர்வு நிறுவனங்கள்

வெளிநாட்டவர்கள் தமக்குத் தாமே ஒழுங்கு செய்யக்கூடியமாதிரி மொழி நாடு சமய வாரியாகப் ப அமைப்புகள் உள்ளன. இவ் அமைப்புகள் புதிதாக சுவிசுக்குக் குடியேறிய தமது அங்கத்தவர்களுக்கு ஒருங்கிணைப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனை வசதிகளைக் கொடுப்பதன் மூலம் Basel-Landschaft மாநிலத்திற்கு உதவுகிறது.

## இளையவர்களுக்கான வசதிகள்

Basel-Landschaft மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. வதியும் கிராமசபைகளில் மேலதிக விபரங்களை அறியலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/language-and-integration/integration-programmes

# மொழி

நீங்கள் Basel-Landschaft சென்று விட்டீர்கள் ஆனால் இன்னும் ஜெர்மன் பேசத் தெரியவில்லையா? எனில் நீங்கள் விரைவில் ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் ஜெர்மன் மொழியைப் பேசினால் நாட்டையும் அதன் மக்களையும் நன்கு அறிந்து கொள்வீர்கள். மேலும் நீங்கள் வேலை தேடுவதும் எளிதாக இருக்கும்.

## உயர் டொச் மொழி / சுவிஸ் டொச் மொழி

சுவிட்சர்லாந்தில் நான்கு தேசிய மொழிகள் உள்ளன: டொச், பிரெஞ்ச், இத்தாலி, ரெட்ரொமானிஷ். Basel-Landschaft மாநிலத்தில் ஜெர்மன் அதிகாரப்பூர்வ மொழி. உயர் டொச் மற்றும் சுவிஸ் டொச் உள்ளது.

- உயர்தனி டொச் (Standarddeutsch)
  டொச் மொழி பேசும் சுவிட்சர்லாந்தில் உள்ளவர்கள் உயர்தனி டொச் எழுதுகிறார்கள். அவர்கள் பள்ளியிலும் சில சமயங்களில் வானொலி மற்றும் தொலைக்காட்சியிலும் கூட உயர்தனி டொச் பேசுகிறார்கள்.
- சுவிஸ் டொச் (Schweizerdeutsch)
  அன்றாட வாழ்வில் மக்கள் பெரும்பாலும் சுவிஸ் டொச் பேசுகிறார்கள். நீங்கள் ஏற்கனவே நன்றாக டொச் பேசுபவராயினும், சுவிஸ் டொச் உங்களுக்குப் புரிந்து கொள்வது கடினம். ஏதாவது புரியவில்லையா? எனில் மக்களை நீங்கள் உயர்தனி டொச் மொழியைப் பேசுமாறு கேட்கத் தயங்க வேண்டாம். நீங்களும் பேச வேண்டியது இல்லை. ஆனால் சிறிது காலம் கழித்து நீங்கள் அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

## டொச் மொழியும் பிள்ளைகளும்

உங்கள் குழந்தை டொச் அல்லாத வேறு மொழியே பேசுகிறதா? எனில் அது கூடிய விரைவில் டொச் மொழி பேசும் குழந்தைகளை அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் குழந்தை கற்றுக்கொள்வதற்கு இதுவே மிக விரைவான வழியாகும். எடுத்துக்காட்டாக உங்கள் குழந்தை ஒரு விளையாட்டுக் குழுவிற்குச் செல்லலாம். பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சிறப்பு சலுகைகளும் உள்ளன.
நீங்களும் உங்கள் குழந்தைக்கு மொழி வளர்ச்சியில் உறுதுணையாக இருக்க முடியும். உங்கள் குழந்தையுடன் நிறைய பேசுங்கள், உங்கள் குழந்தை சொல்வதைக் கேளுங்கள் மற்றும் கதைகளைச் சொல்லுங்கள். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த மற்றும் பேச விரும்பும் மொழியில் பேசுங்கள்.

## Übersetzungen / உரையாடல் மொழிபெயர்ப்புச் சேவை (DE)

நீங்கள் பாசிலுக்குப் புதியவர் மற்றும் ஜெர்மன் இன்னும் நன்றாகப் பேச இயலவில்லையா? எனில் உங்களுக்கு யாராவது விஷயங்களை விளக்க வேண்டும். ஒரு வேளை நீங்கள் உறவினர்கள் அல்லது அறிமுகமானவர்களிடம் கேட்கலாம்.
ஆனால் சில உரையாடல்கள் கடினமானவை அல்லது மிகவும் தனிப்பட்டவை. உதாரணமாக, மருத்துவமனையில் அல்லது ஒரு அதிகாரியுடன் சந்திப்பு.எனில் நீங்கள் ஒரு கலாச்சார ரீதியான மொழிபெயர்ப்பாளரை வேண்டலாம். இவர்கள் குறிப்பாக வேறு கலாச்சாரத்திலிருந்து வருபவர்களுக்கான தொழில் வல்லுநர்கள். இந்தத் தொழில் வல்லுநர்கள் உங்கள் கலாச்சாரத்தை நன்கு அறிந்திருப்பார்கள். மேலும் நீங்கள் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்து கொள்ளுமாறு அவர்களால் உங்களுக்கு விளக்க முடியும்.
உங்களுக்கு அரசு அலுவலகத்தில் இருந்து வரும் கடிதங்கள் புரியவில்லையா? அல்லது நீங்கள் ஒரு படிவத்தை நிரப்ப வேண்டுமா அல்லது எழுத வேண்டுமா? இங்கே உதவி பெறவும்:

- ald உரையாடல் மொழிபெயர்ப்புச் சேவை
- Schreibstube Liestal SRK

## குடிவரவு மற்றும் சிவில் சட்டத்தில் மொழி நிலைகள்

ஒருவேளை நீங்கள் குடியிருப்பு அனுமதி(B) அல்லது நிலையாக வாழ அனுமதிக்கு(C) விண்ணப்பிக்க விரும்புகிறீர்கள் அல்லது நீங்கள் உள்நாட்டு குடிமையாக்கம் பெற விரும்புகிறீர்கள். உங்கள் முதன் மொழி டொச் இல்லையா?எனில், நீங்கள் நன்றாக பேசுகிறீர்கள் என்பதற்கு ஆதாரம் தேவை.
விண்ணப்பிக்க உங்களுக்கு என்னென்ன தேவை என்பது பற்றிய தகவல்களை இங்கே காணலாம்:

- இடம்பெயர்வு அலுவலகம் (Amt für Migration und Bürgerrecht)

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/language-and-integration/language

hallo–
baselland.ch

BASEL
LANDSCHAFT

# டொச்மொழி கற்றல்

டொச் சரியாகப் படிக்கவேண்டுமானால் ஒரு டொச் வகுப்புக்குப் போவது பரிந்துரை செய்யப்படுகிறது. பாசில் பிரதேசத்தில் டொச் வகுப்புகள் பல வகை வாழ்க்கைச் சூழ் நிலைகளிலும் பரந்து சீரமைக்கப்பட்டுள்ளது.

## வசதி வாய்ப்புக்கள்

பாசில் பிரதேசத்தில் மொழி வகுப்புகள் வித்தியாசமான இலக்குகள் கொண்ட குழுக்களாக பல வழங்குநர்களால் நடத்தப்படுகின்றன. சில வழங்குநர்கள் வணிக நோக்கத்திற்காகவும் மற்றவை இலாபத்திற்காகவோ அல்லது மாநிலமளவிலோ நடத்தலாம். எவர் லத்தீன் எழுத்துக்களை எழுதத்தெரியாமல் இருக்கிறாரோ அல்லது எழுத வாசிக்கத் தடுமாறுகிறாரோ அவர் எழுத்துவகுப்புக்குப் Alphabetisierungskurs) போகலாம். வகுப்புக்குப் போக முன்பு வகுப்பின் தன்மை அதற்குரிய கட்டணம் பற்றி அறிந்திருக்கவேண்டும்.பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடன் போவதற்கென, குழந்தைகள் பராமரிப்புடன் கூடிய விசேட வகுப்புகள் உள்ளன. இந்த வாய்ப்புகள் பற்றி Ausländerdienst Baselland (ald) அல்லது வதியும் கிராமசபை அறியத்தரும்.

## மொழியின் தரம்

ஒரு நபர் எவ்வளவு நன்றாக ஜெர்மன் பேசுகிறார் என்பதை "பொதுவான ஐரோப்பிய குறிப்புக் கட்டமைப்பு" மூலம் அளவிட முடியும். இதன் சுருக்கம் GER. GER என்பது மொழிக்கான தரநிலை. இது ஆறு நிலைகளைக் கொண்டுள்ளது: உங்களிடம் A1 அல்லது A2 நிலை இருந்தால், உங்களுக்கு ஜெர்மன் மொழி பற்றிய அடிப்படை அறிவு இருக்கும். நீங்கள் C1 அல்லது C2 நிலையை அடைந்தால், நீங்கள் நன்கு முன்னேறிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

- சுவிட்சர்லாந்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சியை மேற்கொள்ள விரும்புகிறீர்களா? எனில் உங்களுக்கு நிலை B1 அல்லது B2 தேவை.
- நீங்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் படிக்க விரும்பினால், உங்களுக்கு நிலை C1 அல்லது C2 தேவை.

## நிதி உதவி

டொச் வகுப்புக்கு வழமையாகத் தாமே பணம் செலுத்தவேண்டும். இதன் கட்டணங்கள் இடத்துக்கிடம் வித்தியாசப்படும். இதற்காக (ஒரு வகுப்பிற்குரிய கட்டணம்) ஒப்பிட்டுப் பார்ப்பது. பிரயோசனப்படும் ..சில வகுப்புகளுக்கு Basel-Landschaft மாநிலம் அல்லது கிராமசபை நிதி உதவி செயவதால் படிப்பவர்களுக்கு மலிவாக முடியும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/language-and-integration/learning-german